<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>25.11.2025</u>**

SOP. No.8/2017

பக்கம் – 3

PW1 – பிரதீப்

**<u>முதல் எதிர்மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய தாத்தாவின் வாரிசு உரிமை கோரி வாரிசு சான்றிதலுக்காக வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். முதல் எதிர் மனுதாரரிடம் உள்ள ஐந்தாம் எதிர்மனுதாரரை தான் என்னுடைய தாத்தா நாமினியாக காட்டி உள்ளார் என்றால் சரிதான். வங்கியின் சட்ட வரன்முறை படி நாமினியாக காட்டப்பட்டிருக்கும் நபரிடம் தான் வைப்பீடு செய்துள்ள நபர் காலமாக பட்சத்தில் பணம் செலுத்தப்படும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கை நான் ஐந்தாம் எதிர்மனுதாரர் எதிராக மட்டும் தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் ஒன்றாம் எதிர்மனுதாரர் வங்கி வேண்டாத தரப்பினர் என்றால் சரியல்ல அதனால் இந்த மாதிரி ஒன்றாம் எதிர்ப்பு மனுதாரர் எதிராக மட்டும் நிலைக்கேத்தக்கது வேண்டும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**<u>ஐந்தாம் எதிர்மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விலாசத்தில் தான் நாங்கள் குடியிருந்து வருகின்றோம். அந்த வீட்டினை என்னுடைய தாத்தா எல்லப்பன் தான் என்னுடைய தந்தை தாமோதரனுக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இரண்டாம் எதிர்மனுதாரர் என்னுடைய பாட்டி ஆவார். மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்கள் என்னுடைய அத்தை ஆவார்கள். மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்களுக்கு அந்த வீட்டில் எந்த ஒரு பாத்தியதையும் என்னுடைய தாத்தா கொடுக்கவில்லை ஏனென்றால் அவர்களை அவர் திருமணம் செய்து கொடுத்துவிட்ட காரணத்தினால் எந்த ஒரு உரிமையும் கொடுக்கப்படவில்லை. என்னுடைய தாத்தா எல்லப்பன் 2017 ஆம் ஆண்டு காலமானர் அந்த சமயம் அவருடைய வயது என்னவென்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. என்னுடைய தாத்தா எல்லப்பன் என்னுடைய தந்தைக்கு வீடு கொடுத்துள்ளார் என்றும் மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்களுக்கு அவர்களுடைய திருமணத்தை நடத்தி வைத்து செலவு செய்து உள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தா எங்களுடைய குடும்பத்திற்கு

தேவையான அனைத்து விதமான வசதிகளையும் செய்து வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தாவின் பெயர் வேறு எந்த விதமான அசையா சொத்துகளும் கிடையாது. எல்லப்பன் மூன்று லட்சம் ரூபாய் ஒன்றாம் எதிர்மனுதாரரின் வங்கியில் வைப்பீடு செய்து அதற்கு நாமினியாக ஐந்தாம் எதிர்மனுதாரரை நியமித்த விபரம் எங்களுக்கு தெரியாது. ஐந்தாம் எதிர்மனுதாரர் எல்லப்பனின் சகோதரி என்ற காரணத்தினால் என்னுடைய தாத்தா அவருடைய வாரிசுகளான என்னுடைய தந்தை மற்றும் இரண்டு முதல் நான்கு எதிர்மனுதாரர்களுக்கு சகல விதமான சௌரியங்களும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்ட காரணத்தினால் அவருடைய தங்கையான ஐந்தாம் எதிர்மனுதாரருக்கு ஒரு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒன்றாம் எதிர்மனுதாரரின் வங்கியில் ரூபாய் 3 லட்சம் வைப்பீடு செய்து அவரை நாமினியாக காட்டியுள்ள காரணத்தினால் அந்த பணம் ஐந்தாம் எதிர்மனுதாரருக்கு மட்டும் தான் உரிமைபட்டது என்றால் சரியல்ல. (இரண்டு முதல் நான்கு மனுதாரர்களுக்கும் இரண்டு முதல் நான்கு எதிர் மனுதாரர்களின் பெயர்களிலும் வாரிசு உரிமை சான்றிதழ் வழங்க இந்த மனுவை அனுமதிக்க ஐந்தாம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அதனால் இந்த மனுவை அனுமதிக்க ஐந்தாம் எதிர்மனுதாரர் தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.)

Sd/– K.S.அருண் சபாபதி,<br>
முதன்மை சார்பு நீதிபதி,<br>
காஞ்சிபுரம்